கூடுதல்   மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்          266/2019

வாதி தரப்பு சாட்சி –1   சண்முகவள்ளி   திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 11.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ.11 குடும்ப அட்டை என்னிடம் ஏற்கனவே இருந்த அட்டை என்றால் சரிதான். நாகராஜன் என்பவருக்கு வேறு முகவரியில் குடும்ப அட்டை எதுவும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12 எனது மகனின் பள்ளி இறுதி வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் அவரின் தந்தையான நாகராஜனின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். என்னிடம் வா.சா.ஆ.12 ல் உள்ள ச.நா.மணிவேல் என்ற கையெழுத்தை நான் தான் போட்டேன் என்றால் சரிதான்.
2. வா.சா.ஆ.13 எனது மகனான மணிவேல் ஆதார் அடையாள அட்டையில் அவரது தந்தை பெயர் நாகராஜன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால்ச ரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.13 வரையான ஆவணங்களும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே, நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**

-